ரிப்போர்ட்டர்

**August 21, 2014**




சென்னை

# ஆசிரியைகளும் மாணவிகளும் அடிமைகளா?


**கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் பெயர் பெற்ற ஸ்டெல்லா மேரிஸின் இன்னொரு முகம் கேள்விக்குள்ளாகியிருக்கிறது. கட்டுப்பாடு என்ற பெயரில் ஆசிரியைகளையும் மாணவிகளையும் இங்கு அடிமைகள் போல நடத்துவதாக புகார் கிளம்பியிருக்கிறது.**

நாடு சுதந்திரம் பெற்ற தினமான 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் தேதி பிறந்த பெருமைக்குரியது, சென்னை ஸ்டெல்லா மேரிஸ் மகளிர் கல்லூரி. இதனை கத்தோலிக்க சகோதரிகள் மிஷனரி சார்பில் நிர்வகித்து வருகிறார்கள். தொடக்கத்தில் சென்னை சாந்தோமில் இயங்கி வந்த இந்தக் கல்லூரி, 1960-ம் ஆண்டு இப்போதைய டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலைக்கு மாறியது.

சென்னையின் மேல்தட்டு மக்கள் தங்களின் பெண் பிள்ளைகளை அனுப்ப தேர்வு செய்யும் கல்லூரிகளில் ஸ்டெல்லா மேரிஸ் முக்கியமானது. இங்கு பயிலும் மாணவிகளின் மொத்த எண்ணிக்கை 3800. அரசு சம்பளம் பெறும் ஆசிரியைகள் 75 பேர் பணிபுரிகிறார்கள். கல்லூரி நிர்வாகமே தனது பொறுப்பில் பணியமர்த்தியிருக்கும் ஆசிரியைகளின் எண்ணிக்கை 110. கடந்த 1980-களிலேயே இந்தக் கல்லூரி தன்னாட்சி பெற்றுவிட்டது. இப்படி பெயர் சொல்லும் நிறுவனமாக வளர்ந்திருக்கும் ஸ்டெல்லா மேரிஸ் குறித்துதான் புகார்களும் வட்டமிட ஆரம்பித்திருக்கின்றன.

இது சம்பந்தமாக கல்லூரி ஆசிரியைகள் மற்றும் மாணவிகள் மத்தியில் பேசினோம். "கல்லூரிக்கான டிரெஸ் கோடு மீறுதல், செல்போன் உபயோகித்தல், வளாகத்தில் எச்சில் துப்புதல், கல்லூரி பொருட்களை சேதப்படுத்துதல் ஆகியவற்றை கடுமையான குற்றங்களாக கல்லூரி நிர்வாகம் பட்டியலிட்டிருக்கிறது. இது ஒழுக்கமான விஷயம்தான். ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ இவற்றை மீறிவிடும் மாணவிகளுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையைக் கேட்டாலே தலை சுற்றும்.

'ஒவ்வொரு செமஸ்டரிலும் குறைந்தபட்சம் 75 சதவிகித வேலை நாட்களில் கல்லூரிக்கு வருகை தந்த மாணவ, மாணவிகளைத் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என்பது பல்கலைக்கழக விதி. ஆனால் இங்கு அதனை 85 சதவிகிதமாக உயர்த்தி அமல்படுத்துகிறார்கள். இதனால் உடல்நலப் பிரச்னைகள் மற்றும் நெருங்கிய உறவினர்களின் இல்ல நிகழ்ச்சிகளுக்குக்கூட விடுப்பு எடுக்க முடியாமல் மாணவிகள் மன



# ஸ்டெல்லா மேரீஸ் குமுறல்

ச.செல்வராஜ்

அழுத்தத்திற்கு ஆளாகின்றனர்.

கல்லூரியின் ரெகுலர் வகுப்புகள் தவிர, மாலைநேர கோர்ஸ்களும் கல்லூரி நிர்வாகத்தால் நடத்தப்படுகின்றன. பல்கலைக்கழக விதிமுறைப்படி, மாலைநேர கோர்ஸ்களுக்கான மாணவிகள் பிற்பகல் 1 மணிக்குத்தான் கல்லூரிக்கு வரவேண்டும். அவர்களுக்கு, 'மேனேஜ்மென்ட் ஸ்டாப்' மூலமாக மட்டுமே பாடம் நடத்த வேண்டும்.

ஆனால் ஸ்டெல்லா மேரிஸில் இந்தி, சமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிப்பாடம் பயிலும் மாலை நேர கோர்ஸ் மாணவிகளை காலை 11 மணிக்கே வர வைக்கிறார்கள். ரெகுலர் மாணவிகளோடு ஒரே வகுப்பில் அவர்களை அமர வைக்கின்றனர். அரசு சம்பளம் பெறும் ஆசிரியைகள் மூலமாகவே அவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதனால் கூடுதலான கட்டணம் செலுத்திப் படிக்கும் மாலைநேர கோர்ஸ் மாணவிகள், ரெகுலர் மாணவிகள், அரசு சம்பளம் பெறும் ஆசிரியைகள் ஆகிய மூன்று தரப்புமே பாதிக்கப்படுகிறார்கள். இது அப்பட்டமான விதிமீறல்!

கல்லூரிகளுக்கு, 'டுவின் வெகேஷன்' என்பது யு.ஜி.சி. விதிமுறைப்படி கட்டாய மாக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு செமஸ்டர் முடிவிலும் விடுமுறை விடப்படவேண்டும். ஆனால் ஸ்டெல்லா மேரிஸில் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே பள்ளிகளைப் போல கோடை விடுமுறை விடுகிறார்கள். இதுவும் மாணவிகளுக்கும் ஆசிரியைகளுக்கும் மன அழுத்தத்தை அதிகரிக்கும்.

கல்லூரிகளில் உதவி முதல்வர் என்கிற பதவிக்கே யு.ஜி.சி. விதிமுறைகளில் இடமில்லை. ஆனால் இங்கு மூன்று பேராசிரியர்களை உதவி முதல்வர்களாக வைத்துள்ளனர். கல்லூரி முதல்வர், துறைத் தலைவர்கள் ஆகியோர் முழுக்க சீனியாரிட்டி அடிப்படையில்தான் தேர்வு செய்யப்பட வேண்டும். இங்கு அந்த நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதே இல்லை.

உதாரணத்திற்கு, கல்லூரி முதல்வரான ஜெஸிந்தா குவாட்ரஸ், சீனியாரிட்டியில் ஆறாவது இடத்தில்தான் இருக்கிறார். அதேபோல ஆங்கிலத் துறையில் சீனியரான அஜி ஜார்ஜுக்குப் பதிலாக மிருணா ஜார்ஜ் தலைவராக அமர்த்தப்பட்டிருக்கிறார்.

கல்லூரி ஆசிரியர்கள் பல்கலைக்கழக அளவில் சங்கம் அமைத்து செயல்படும் உரிமை நாடு முழுக்க உள்ளது. ஆனால் ஸ்டெல்லா மேரிஸில் மட்டும் ஆசிரியைகளுக்கு அந்த உரிமை மறுக்கப்படுகிறது. இதெல்லாம் ஆசிரியைகளை அடிமைத்தனமாக நடத்துவது ஆகாதா?" என்றார்கள் அவர்கள்.

இந்தப் புகார்கள் குறித்து விளக்கம் பெற ஸ்டெல்லா மேரிஸுக்குச் சென்றோம். கல்லூரியின் செயலாளர், மூன்று உதவி முதல்வர்கள் ஆகியோர் சுற்றி அமர்ந்திருக்க, கல்லூரியின் முதல்வரான சகோதரி ஜெஸிந்தா குவாட்ரஸ் நம்மிடம் பேசினார். "ஸ்டெல்லா மேரிஸ் என்றால், முதலில் ஒழுக்கம்தான்! அதில் நாங்கள் கண்டிப்புடன் இருப்பதைத் தவிர்க்க முடியாது.

மாணவிகளின் வருகைப் பதிவேடு 75 சதவிகிதத்திற்கு குறையாமல் இருக்கவேண்டும் என்பதுதான் பல்கலைக்கழக விதிமுறை. அதைவிட சற்று கூடுதலாக கல்லூரியே நிர்ணயித்துக் கொள்வதில் தவறேதும் இல்லை. இதனால், மாணவிகள் வகுப்புகளுக்கு 'கட்' அடித்துவிட்டு 'மால்'களில் சுற்றும் அவலத்திற்கு வழியில்லாமல் போகிறது. எனினும் விளையாட்டு உள்ளிட்ட



ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி


ஜெஸிந்தா குவாட்ரஸ்

தனித் திறமைப் போட்டிகளுக்குத் தயாராகும் மாணவிகளுக்கு இதில் 10 சதவிகிதம் தளர்வு கொடுக்கிறோம்.

எங்கள் கல்லூரியில் அரசு உதவியுடன் கூடிய சுமார் 35 உதவிப் பேராசிரியர் பணியிடம் காலியாக உள்ளது. எனவே சில ரெகுலர் வகுப்புகளுக்கே 'மேனேஜ்மென்ட் ஸ்டாப்' மூலமாகத்தான் பாடம் நடத்துகிறோம். சமஸ்கிருதம் உள்ளிட்ட சில மொழிப்பாட வகுப்புகள் இதில் அடக்கம். இந்த வகுப்புகளுக்கு ரெகுலர், மாலைநேர கோர்ஸ் ஆகிய இரண்டுக்குமே சேர்த்து 20 மாணவிகள் என்ற அளவில்தான் இருக்கிறார்கள். எனவே இரு தரப்பையும் ஒன்றாக உட்கார வைத்து, 'மேனேஜ்மென்ட் ஸ்டாப்' மூலமாக பாடம் நடத்துகிறோம். இந்த வகுப்புகளுக்கும் மாலை நேர கோர்ஸ் மாணவிகள் பகல் 12 மணிக்குத்தான் வருவார்கள்.

நிர்வாகக் காரணங்களுக்காக கல்லூரியில் 3 உதவி முதல்வர்களை வைத்துக்கொள்வதை எல்லாம் விதி மீறலாக எடுத்துக்கொள்ள முடியாது. முதல்வர் நியமனத்தைப் பொறுத்தவரை, ஆரம்பத்தில் இருந்தே 'சிஸ்டர்'கள்தான் பொறுப்பில் இருந்து வருகிறார்கள். அது நிர்வாகத்தின் முடிவு. அதனை யு.ஜி.சி.யும் பல்கலைக்கழகமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. துறைத் தலைவர்கள் பதவியை சில பேராசிரியர்கள் ஏற்க விரும்புவதில்லை. அதன் காரணமாகவே சில துறைகளில் சீனியர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் தலைவர் ஆகியிருக்கிறார்கள்.

தேசிய அளவில் கல்லூரிகளின் தரத்தை மதிப்பிடும் 'நாக்' அமைப்பு கடந்த பிப்ரவரியில் எங்கள் கல்லூரியை மதிப்பிட்டு நான்குக்கு 3.8 மதிப்பெண் வழங்கியிருக்கிறது. இது தமிழக அளவில் முதலிடம். அகில இந்திய அளவில் இரண்டாவது இடம். இதெல்லாம் நிர்வாகம், ஆசிரியைகள், மாணவிகள் ஆகியோரின் கூட்டு முயற்சியால் கிடைத்த வெற்றி. எனவே இதில் அடிமைத்தனம் எங்கிருந்து வந்தது?'' எனக் கேட்டார், கல்லூரி முதல்வர்.

**"தேசிய அளவில் 'நாக்' அமைப்பு கடந்த பிப்ரவரியில் எங்கள் கல்லூரியை மதிப்பிட்டு நான்குக்கு 3.8 மதிப்பெண் வழங்கியிருக்கிறது. இது தமிழக அளவில் முதலிடம்."**

'கடந்த ஜூலையில் அரசு ஒப்புதல் கொடுத்த 10 ஆசிரியர் பணியிடங்களை பல்கலைக்கழக பிரதிநிதி இல்லாமல், நீங்களாகவே நிரப்பிக் கொண்டதாக புகார் இருக்கிறதே?' என்றும் அவரிடம் கேட்டோம். "மைனாரிட்டி கல்வி நிறுவனங்கள் தங்களது தேர்வுக் கமிட்டி மூலமாகவே பணியிடங்களை நிரப்பலாம் என 2011-ல் நீதிமன்றத் தீர்ப்பு வந்திருக்கிறது. தேர்வு செய்யப்பட்ட ஆசிரியைகளின் பட்டியல் மற்றும் அவர்கள் தேர்வு செய்யப்பட்ட முறையை நிச்சயம் சென்னை பல்கலைக்கழகத்திற்கு நாங்கள் தெரிவித்தாக வேண்டும். அதில் தவறு இருந்தால் பல்கலைக்கழகம் சும்மா விடுமா?" என்றார் அவர்.

கல்லூரிக் கல்வி இயக்குனரகத்தில் உயர் அதிகாரி ஒருவரிடம் நாம் பேசியபோது, "மாணவிகளுக்கு அபராதம், 85 சதவிகித வருகைப் பதிவேடு, சீனியாரிட்டி அடிப்படையில் பணி நியமனம் உள்ளிட்ட விஷயங்களில் பாதிக்கப்பட்ட மாணவிகள் அல்லது பேராசிரியர்கள் புகார் அளித்தால் கல்லூரிக் கல்வி இயக்குனரகம் தலையிடும். மற்றபடி தேவையின்றி நாங்கள் தலையை நுழைப்பதில்லை" என்றார்.

**படங்கள்: கணேஷ்**